DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கிராம நிர்வாக அதிகாரி |
| பெயர் | - | பன்னீர்செல்வம் | வட்டம் | - | பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம் |
| த/பெ | - | பழனிச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | சுண்டாக்காமுத்தூர் | வயது | - | 42/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-10-2025</u>**

**(1 -ம் எதிரி ஆஜர்) (2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். எதிரிகளை சம்பவத்தன்று பார்த்துள்ளேன். கடந்த 2022-ம் வருடம் நான் வால்பாறையில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியில் இருந்தபோது ஜனவரி மாதம் 27-ம் தேதி மதனகோபால் குரங்குமுடியில் உள்ள அவரது எஸ்டேட்டிற்கு சென்றதாகவும், அவருக்கும் அவரது மனைவிக்கும் இருந்த குடும்ப பிரச்சனையில் அவரது மனைவியும், அவரது எஸ்டேட்டில் பணிபுரியும் தொழிலாளிகளும் சேர்ந்த மதனகோபாலை ரூமில் அடைத்து வெளியே வரவிடாமல் செய்ததாக கேள்விப்பட்டேன். அதன்பின்னர் மதனகோபால் வால்பாறை காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்து போலீசார் எனக்கு தகவல் சொன்னதின் பேரில் நானும், அப்போது இருந்த வட்டாட்சியர், எனது உதவியாளர் ஈஸ்வரன் ஆகியோர்கள் மதனகோபாலின் எஸ்டேட்டிற்கு சென்றோம். நானும் அங்கிருந்த போலீசாரும் எதிரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி மதனகோபாலை வெளியே மீட்டு வந்தோம். அதன்பின்னர் மதனகோபால் எதிரிகளின் மீது கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். தகவல் தெரிந்துதான் நான் சம்பவயிடம் வந்தேன் என்றால் சரிதான். எனக்கு தகவல் யார் கொடுத்தது என்றால் காவல் நிலையத்திலிருந்து கொடுத்தார்கள். என்ன தகவல் கொடுத்தார்கள் என்றால் குரங்குமுடி எஸ்டேட்டில் எஸ்டேட் பெயர் எனக்கு சரியாக தெரியவில்லை. மதனகோபால் என்பவரை குடும்ப பிரச்சனை காரணமாக அவரை பிடித்து வைத்திருப்பதாகவும், அங்கு சென்று அவரை அழைத்து வரவேண்டும் என்று தகவல் சொன்னார்கள். எனக்கு காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் 28-1-2022-ம் தேதி இரவு 02.00 மணியளவில் தகவல் கொடுத்தார்கள். இரவு 02.00 மணிக்கு எந்த பிரச்சனையும் நடக்கவில்லை எனக்கு தகவல்

கொடுத்ததாக நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு தகவல் தெரிந்தவுடன் எவ்வளவு நேரத்திற்கு சென்றேன் என்றால் சுமார் 1/2 மணி நேரம் முதல் 01.00 மணி நேரத்திற்கு சம்பவயிடம் சென்றேன். அந்த நேரத்தில் தொழிலாளர்கள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். வால்பாறை பகுதி அடர்ந்த காட்டு பகுதி என்பதால் மாலை 06.00 மணிக்குமேல் மக்கள் நடமாட்டம் இருக்காது என்றாலும், இரவு 02.00 மணிக்கு சம்பவயிடத்தில் தொழிலாளர்கள் இருந்ததாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடன் தாசில்தாரும், உதவியாளரும் இரவு 02.00 மணிக்கு வந்தாரா என்றால் ஆமாம். நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்குமுன்பு போலீசார்கள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நாங்கள் சம்பவயிடத்தில் யாரிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் மதனகோபால் மற்றும் அவரது மனைவியிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | கிராம நிர்வாக அதிகாரி |
| பெயர் | - | திரு.ஈஸ்வரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வீரன் | சமயம் | - | |
| கிராமம் | - | கோஆப்ரேடிங் காலனி | வயது | - | 56/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-10-2025</u>**

**(1 -ம் எதிரி ஆஜர்) (2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறையில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும், ஆஜர் 1-ம் எதிரியை தெரியும். வழக்கில் மற்ற எதிரிகளை தெரியும். கடந்த 27-01-2022-ம் தேதி நான் கிராம உதவியாளராக வால்பாறையில் பணியில் இருந்தபோது மதனகோபால் என்பவர் குரங்குமுடியில் உள்ள அவரது ஸ்ரீராம் எஸ்டேட்டிற்கு சென்றபோது எஸ்டேட்டில் பணிபுரிந்த தொழிலாளர்களும் மதனகோபாலின் குடும்பத்தாரும் அவரை எஸ்டேட்டில் உள்ள அறையில் இருந்து வெளியே வரவிடாமல் தடுத்து நிறுத்தி வைத்திருந்ததாகவும், அன்று இரவு 12.00- 01.00 மணியளவில் வால்பாறை தாசில்தார் அவர்கள் எனக்கும், VAO பன்னீர்செல்வம் ஆகியோர்களுக்கும் மதனகோபால் அவரது எஸ்டேட்டில் பிரச்சனையில் இருப்பதாகவும் DSP மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் அங்கு செல்ல இருப்பதாகவும், அவர்களுடன் எங்களையும் வரும்மாறு அழைத்தார்கள். நாங்கள் இரவு 01.00 மணியளவில் ஸ்ரீராம் எஸ்டேட்டிற்கு சென்றபோது எஸ்டேட் தொழிலாளர்கள் கூடி ஒன்றாக உட்கார்ந்து இருந்தார்கள் அவர்களிடம் DSP, ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் VAO சமாதானம் பேசி மதனகோபாலை வெளியே அழைத்து வந்தோம். பின்னர் நாங்கள் வால்பாறைக்கு சென்றுவிட்டோம். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு சம்பவம் குறித்து யார் தகவல் கொடுத்தது என்றால் போலீசார் தாசில்தாருக்கு தகவல் கொடுத்ததாக எனக்கு தாசில்தார் சொல்லி சம்பவயிடத்திற்கு சென்றோம். சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததற்கு பின்புதான் சம்பவயிடம் சென்றோம் என்றால் ஆமாம். சம்பவயிடம் சென்றுநாங்கள் என்ன செய்தோம் என்றால் பேச்சு வார்த்தை நடத்தினோம் யாரிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். எது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் அது பற்றி தெரியாது. நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வால்பாறை என்பது அடர்ந்த காடு

என்பதால் இரவு 01.00 மணியளவில் பொது மக்கள் யாரும் அங்கு இருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை </u>**:இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,<br>
மாவட்ட உரிமையியல் மற்றும்<br>
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.19/2022**
**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | வனக்காவலர் |
| பெயர் | - | சிம்சன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சங்கிலி | சமயம் | - | |
| கிராமம் | - | காடம்பாறை | வயது | - | 40/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-10-2025</u>**

**(1 -ம் எதிரி ஆஜர்) (2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது காடம்பாறையில் வனக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மதனகோபாலை தெரியும். ஆஜர் 1-ம் எதிரியை தெரியும். எதிரி சாமிக்கன்னு என்பவரை தெரியும், வழக்கில் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 28-01-2022-ம் தேதி நான் குரங்குமுடியில் யானைகள் கண்காணிப்பு பணியில் இருந்தபோது எனது உயர் அதிகாரி தாசில்தார் DSP ஆகியோர்கள் வருவார்கள் அவர்களுடன் கேஜிஆர் எஸ்டேட்டிற்கு உடன் செல்லுமாறு சொன்னதின் பேரில் நானும் சென்றேன். மனித விலங்கு மோதல் நடந்துவிடக்கூடாது என்பதற்காக என்னை அங்கு செல்லசொன்னார்கள். அன்று இரவு 01.00 மணியளவில் சென்றேன். அங்கு எஸ்டேட் தொழிலாளர்கள் உரிமையாளர் வீட்டின் முன்பு அமர்ந்திருந்தார்கள். எதற்கு அமர்ந்து இருந்தார்கள் என்று தெரியாது. DSP சார், தாசில்தார் சார் ஆஜர் 1-ம் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மக்கள் கலைந்தபின்பு நாங்கள் வந்துவிட்டோம். மதனகோபாலை நான் சம்பவயிடத்தில் பார்க்கவில்லை. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கேஜிஆர் எஸ்டேட் என்பது அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் உள்ள ஒரு எஸ்டேட் என்றால் ஆமாம். அங்கு மிருகங்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் ஆமாம். அங்கு மிருகங்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பது அங்குள்ள பொது மக்களுக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் மிருகங்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் பொதுமக்கள் யாரும் அந்த நேரத்தில் அங்கு இல்லை என்றால் சரியல்ல. எனக்குயார் தகவல் கொடுத்தது என்றால் எனது உயர் அதிகாரியான பாரஸ்டர் தகவல் கொடுத்தார். நான் சொல்வது போல சம்பவம் நடைபெறவில்லை போலீசார் கேட்டுக்கொண்டதற்காக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | ஓட்டுனர் |
| பெயர் | - | ஜெயக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | நாதன் | சமயம் | - | |
| கிராமம் | - | குரங்குமுடி எஸ்டேட் பாரதிதாசன் நகர் | வயது | - | 43/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-10-2025</u>**

**(1 -ம் எதிரி ஆஜர்) (2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லோடு வண்டி ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். ஆஜர் 1-ம் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 12-04-2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் குரங்குமுடியில் உள்ள ஸ்ரீராம் எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்றபோது எஸ்டேட்டில் போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள். போலீசார் அங்கு அளந்து மேப் வரைந்துகொண்டிருந்தார்கள். போலீசார் எதற்காக வந்தார்கள் என்று தெரியவில்லை என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 12-04-2022-ம் தேதி காலை 07.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய போலீசார் கேஜிஆர் எஸ்டேட்டிற்கு குற்ற எண் 93/2022 வழக்கு தொடர்பாக விசாரிக்கவந்தபோது நானும் பொன்னான் என்பவரும் அங்கு நின்றுகொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. அப்போது போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும் பொன்னர் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக

மாறி நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.